**C.C. 312 of 2018** **Previous Date : 23.09.2024**

**PW1**

**சகாபுதீன் த/பெ.சாகுல் ஹமீது**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**Accused present**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த எதிரி நான் புகார் கொடுப்பதற்கு முன்பு என் மீது புகார் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எதிரியை எனக்கு எத்தனை நாள் தெரியும் என்றால் புகார் கொடுப்பதற்கு ஆறு மாதத்திற்கு முன்பு தெரியும். நான் என்ன தொழில் செய்தேன் என்றால் கறி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எத்தனை வருடங்களாக கறிகடை வைத்துள்ளேன் என்றால் 14–15 வருடங்களாக கறி கடை வைத்துள்ளேன். எனது அப்பா பெயர் என்ன என்றால் சாகுல் ஹமீது. சுலைமான் என்பவர் யார் என்றால் எனது உடன் பிறந்த அண்ணன். ஆஜர் எதிரி என் மீதும், என் அப்பா மீதும், உன் அண்ணன் மீதும் பழனி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அந்த விபரம் தெரியாது, போலிசார் விசாரித்துள்ளார்கள், அதற்கு பிறகு தான் தெரியும். எந்த தேதியில் அவ்வாறு போலிசார் விசாரித்தார்கள் என்றால் அது ஞாபகமில்லை. ஆஜர் எதிரி கார் வாங்கி விற்கும் இடைத்தரகர் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லியுள்ள கார் என்னுடைய சகோதரருடையது என்றால் இல்லை, அது அஜீஸ் என்ற சேலத்தை சேர்ந்த நபருடையது. மேற்படி அஜீஸ் இந்த வழக்கில் சாட்சியாக இருக்கிறாரா என்று தெரியுமா என்றால் அவர் சாட்சியாக இல்லை. போலிஸ் விசாரணையில் மேற்படி கார் அஜீஸ் உடையது என்று சொன்னேனா என்றால் இல்லை, போலிஸ் விசாரிக்கவில்லை, அவரை தெரிந்தவர் என்று சொல்லியுள்ளேன், அவர் தொழுகை விசயத்தில் ஈடுபாடு உடையவர். மேற்படி அஜீஸ் என்பவரின் காரை நான் முறைகேடாக எடுத்து வந்து விற்பனை செய்தேன் என்றால் இல்லை. அஜீஸ்–க்கு சேரவேண்டிய பணத்தை ஆஜர் எதிரி என்னிடம் கொடுத்துவிட்டார் என்றாலும் அந்த பணம் அஜீஸ்–க்கு சேரவில்லை என்றாலும் சரியல்ல. நான் பணத்தை அஜீஸ்–யிடம் கொடுக்கவில்லை என்பதால் ஆஜர் எதிரி என்னிடம் கேட்டபோது 07.09.2017ம் தேதி நான் என் சகோதரர் சுலைமான், எனது அப்பா சாகுல் ஹமீது ஆகியோர் ஆஜர் எதிரியை தாக்கி பழனி State bank ரோட்டில் வைத்து பணம் செலுத்த வந்த ஆஜர் எதிரி தாக்கி ஆஜர் எதிரியிடம் இருந்து ரூபாய் 1,30,000/– பணத்தை எடுத்து கொண்டு ஆஜர் எதிரியையும், அவரது காரையும் தாக்கினோம் என்றால் சரியல்ல,

கார் என்னிடம் தான் இன்று வரை உள்ளது. உண்மைக்கு மாறான சங்கதிகளை சொல்லி பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் எல்லோரும் என் உறவினர்கள் இல்லை. இந்த வழக்கு புகாரில் நான் சொல்லியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் அவர் கொடுத்த பணத்தை மேற்படி அஜீஸ்க்கு கொடுக்காமல் இருந்து கொண்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை நான் நகர் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் போலிசார் தேடுகிறார்கள் என்பதால் நாங்கள் அப்போது ஊரில் இல்லை, அதனால் உயர்நீதிமன்றத்தில் புகார் செய்தோம். இந்த வழக்கில் உண்மை தன்மை இல்லை என்று காவல் கண்காணிப்பாளர் இந்த புகாரை தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் சரியல்ல. காவல் கண்காணிப்பாளர் அவ்வாறு தள்ளுபடி செய்த காரணத்தினால் தான் உயர்நீதிமன்றத்திற்கு போனேன் என்றால் நான் கொடுத்த புகார் தான் வழக்காக பதிவாகியுள்ளது. 08.09.2017ம் தேதி என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் வழக்கு பதிவு செய்துள்ளார்கள், அது போலிஸ் மூலம் தான் எனக்கு தெரியும். யார் கொடுத்த புகாரில் முதலில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் நான் கொடுத்த புகாரில் பதிவு செய்யப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் குற்ற எண்.650/2017 முதல் தகவல் அறிக்கையில் காலம் 1ல் தேதி என்பதில் 08.11.2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியிடம் பிரச்சனை செய்து காரையும், பணத்தையும் எடுத்து கொண்ட பின்பு எதிரி கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பு பொய்யான சங்கதிகளை சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, நான் பறிக்கவில்லை. மேற்படி கார் என்னிடம் தான் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அஜீஸ் என்பவரை இந்த வழக்கில் விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இருக்கிறதா என்றால் இல்லை. உண்மையில் நான் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றாலும் இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 18:11:38 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

C.C. 312 of 2018 Previous Date : 23.09.2024

PW3

**மன்சூர் உசேன் த/பெ.அமீர் அம்ஜா**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**Accused present.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் புதுஆயக்குடியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சகாபுதீன் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். அ.சா.1ஐ எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 10–15 வருடங்களாக தெரியும். அ.சா.1 தரப்பினர் ஆஜர் எதிரியை தான் தாக்கினார்கள் என்றால் அப்பாஸ் தான் சகாபுதீனை தாக்கினார். அப்போது சுமார் எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 11.00 மணி இருக்கும். அந்த நேரம் பொதுமக்கள் அதிகம் வங்கி வரவு செலவு நடக்கும் சாலை என்றாலும் அந்த நேரத்தில் அங்கு கூட்டமாக இருக்கும் என்றாலும் சரிதான். ஆஜர் எதிரி காரில் இருந்தார் என்றால் இல்லை. ஆஜர் எதிரி காரில் வந்தார் என்றால் இல்லை, ஆஜர் எதிரியும், அ.சா.1ம் சண்டை போட்டார்கள். அதில் ஆஜர் எதிரிக்கும், அ.சா.1க்கும் என்ன காயம் ஏற்பட்டது என்றால் அ.சா.1க்கு விபத்தில் காயம்பட்டது. காது பக்கத்தில் இரத்த காயம் வந்தது, நானும், இரண்டுபேரும் விலக்கிவிட்டோம், ஆஜர் எதிரிக்கு என்ன காயம் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் 08.09.2017ம் தேதி மதியம் 3.00 மணியளவில் விசாரித்தார்கள். நான் போலிஸ் விசாரணையில் என்ன காரணத்திற்காக பழனி வந்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் அ.சா.1 எனக்கு உறவினர், தெரிந்தவர் என்பதால் உண்மையை மறைத்து அ.சா.1க்கு ஆதரவாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, அ.சா.1 எனது நண்பர். ஆஜர் எதிரி அ.சா.1 மீதும், அவரது அண்ணன்,அப்பா மீதும் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி மருத்துவமனையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மறுநாள் மருத்துவமனைக்கு சென்று தான் ஆஜர் எதிரி மருத்துவமனையில் இருந்தார் என்று

**தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி புகார் கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் அப்போது அவர் புகார் கொடுக்கவில்லை.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 18:11:49 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 312 of 2018** **Previous Date : 23.09.2024**

**PW4**

**சுலைமான் த/பெ.பாரூக்**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**Accused present**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் புதுஆயக்குடியில் வந்தபோது பழனி டிராவல்ஸ் பங்களா பக்கத்தில் கூட்டமாக இருந்தது. அங்கு சகாபுதினும், அப்பாஸ்-ம் சண்டை போட்டார்கள், விலக்கி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் என்னை விசாரிக்கவில்லை. முதல் விசாரணையில் சொன்னதை யார் சொல்லி சொன்னேன் என்றால் நானாக பார்த்ததை சொன்னேன். எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் சகாபுதின் எனது உறவினர் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது பெயரையும், முகவரியும் மட்டும் கொடுத்துவிட்டு தற்போது போலிசார் என்னை விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் என்றாலும் சரியல்ல.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 18:11:56 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 312 of 2018** **Previous Date : 23.09.2024**

**PW5**

**சுலைமான் த/பெ.சாகுல் ஹமீது**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**Accused present**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அ.சா.1 சகாபுதீன் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான், எனது உடன் பிறந்த தம்பி. தற்போது வரை இந்த வழக்கில் சொல்லியுள்ள கார் வாகனம் என்னிடம் தான் உள்ளது என்றால் ஆமாம், என்னிடம் தான் உள்ளது. அந்த கார் வாகனத்தின் அசல் Owner நான் இல்லை என்றால் சரிதான், அவர் எனது நண்பர். அந்த கார் வாகனத்தின் அசல் ஆவணத்தை எதிரியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் ஆமாம், ரூபாய் 1,40,000/- Advance கொடுத்தவுடன் ஆஜர் எதிரியிடம் ஆவணத்தை கொடுத்துவிட்டோம். அந்த ரூபாய் 1,40,000/- என்னானது என்றால் அதை அஜீஸ்-யிடம் கொடுத்துவிட்டோம், ஆஜர் எதிரி தான் அஜீஸ்-யிடம் கைப்பட கொடுத்தார். ஆஜர் எதிரி எங்களிடம் கொடுத்த ரூபாய் 1,40,000/- பணத்தை நாங்கள் வைத்து கொண்டோம் என்றாலும் அதை அஜீஸ்-யிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த பணத்தை ஆஜர் எதிரி தான் அஜீஸ்-யிடம் கொடுத்தார். ஆஜர் எதிரி பொதுவாக கார் வாங்கி கொடுக்கும் Mediator என்றால் சரிதான். அஜீஸ்க்கு சேர வேண்டிய Advance பணத்தை நாங்கள் கொடுக்கவில்லை என்பதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, மீதி பணத்தை ஆஜர் எதிரி கொடுக்கவில்லை. காரின் மீதி பணத்தை நாங்கள் ஆஜர் எதிரியிடம் கேட்டோமா அல்லது ஆஜர் எதிரி எங்களிடம் கேட்டாரா என்றால் ஆஜர் எதிரி ஆறு மாதம் இல்லை, வந்தபிறகு அஜீஸ் கேட்க சொன்னதால் நான் கேட்டேன். எங்கு வைத்து கேட்டேன் என்றால் SBI Bank அருகில் வைத்து கேட்டேன். யார் யார் எல்லாம் கேட்டோம் என்றால் அந்த இடத்தில் ஆஜர் எதிரியை நானும், என் தம்பியும் பார்த்தோம் அதனால் நாங்கள் கேட்டோம். ஆஜர் எதிரியுடன் யார் இருந்தார் என்றால் அவருடன் யாரும் இல்லை. அஜீஸ் என்பவரை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் அவரை விசாரிக்கலாம். அஜீஸை விசாரித்தால் தான் யார் பணம் யாரிடம் இருக்கிறது என்று தெரிய வரும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கொடுத்த முன் பணத்தை வாங்கி நாங்கள் அஜீஸ்-யிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**கார் தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிக்கு எதிராக இந்த புகார் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 18:12:09 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 312 of 2018** **Previous Date : 23.09.2024**

**PW6**

**அபூபக்கர் சித்திக் த/பெ.முகமது யாசிக்**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**Accused present**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. நான் பார்வை மகஜரில் எத்தனையாவது கையொப்பம் செய்தேன் என்றால் முதலாவது கையொப்பம். பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் படம் வரைந்தார்கள் அதற்கு கையொப்பம் கேட்டார்கள் அதனால் கையொப்பம் செய்தேன். வரைபடத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். எழுதிய பேப்பரில் கையொப்பம் செய்தேனா, எழுதாத பேப்பரில் கையொப்பம் செய்தேனா என்றால் படம் வரைந்தார்கள் கையொப்பம் செய்தேன். கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றால் பழனி டிராவல்ஸ் பங்களா பக்கத்தில் உள்ள State Bank பக்கத்தில் வைத்து போட்டேன். எனக்கு அந்த State Bankல் கணக்கு உள்ளதா என்றால் இல்லை. நான் எந்த டீ கடையில் டீ குடித்தேன் என்றால் டிராவல்ஸ் பங்களா முக்கில் உள்ள டீ கடைக்கு வந்தேன். நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

M PONPANDI — Digitally signed by M PONPANDI Date: 2026.07.20 18:12:21 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**